**அறிவித்தல்**

நெசவுத்தறி ஸ்தாபனத்தாருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நெசவுத்தறி ஸ்தாபனத்தாரின் அன்றாட பாவனைக்கு வேண்டிய நூல்களை சிறந்த முறையில் வேண்டியவாறு சாயம்போட்டுக் கொடுப்பதற்கு எங்கள் ஸ்தாபனம் முன்வந்துள்ளது இச் சேவையைப் பெறவிரும்புவோர் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.

காரியதரிசி,
இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை, (வரையறை) ஸ்தாபனம்.
வல்லை, உடுப்பிட்டி. 641



Registered as a News paper in Ceylon விலை சதம் 10.

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 10 [29-4-68] இதழ் 78

யாழ்ப்பாணம் கீலக சித்திரை 17 முகறம் 30 திங்கட் கிழமை





போன்: 7199

பொ. அம்பலவாணர்

தங்க வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.


# வேலை நிறுத்தத்தை கைவிட வர்த்தக ஊழியர் சங்கம் முடிவு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் கடந்த ஒரு மாத காலமாக நடத்தி வந்தவேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென முடிவு செய்திருக்கின்றது. இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 25 ஆயிரம் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

நாளை மாலை டமெல் பார்க்கில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் வர்த்தக ஊழியர் சங்கப்பொதுக் காரியதரிசி திரு. பாலா தம்பு இத்தீர்மானத்தை அறிவிப்பார்.

இன்று காலை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி வி பி. சமரசிங்காவையும் துறைமுக கூட்டுஸ்தாபன தலைவர் திரு. ஏ. டபிள்யு. அபய குணசேகராவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னரே வர்த்தக ஊழியர் சங்கம் இம் முடிவை எடுத்ததாகத் தெரிகிறது.

வட்டுக்கோட்டை

## முக்கொலைவழக்கில் இருஎதிரிகளும்விடுதலை

அளவெட்டி, ஞாயிறு

வட்டுக்கோட்டை முக்கொலைவழக்கின் இரு எதிரிகளையும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் நேற்று விடுதலை செய்தார். அட்டர்னி ஜெனரலின் உத்தரவைத் தொடர்ந்தே எதிரிகள் இருவரும்விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவ்வழக்கில் 1966-ம் ஆண்டு நவம்பர்மாதம் 28-ம் திகதி காசிப்பிள்ளை பாக்கியலட்சுமி, [5 வயது], காசிப்பிள்ளை இராசேந்திரம் [8 வயது] காசிப்பிள்ளை வைரவநாதன் [3 வயது] ஆகியமூவரையும் கார்த்திகைக்காய் என்னும் நஞ்சுக்காயை உண்ணக்கொடுத்து கொலைசெய்ததாக இறந்த குழந்தைகளின் தந்தையான இராமசாமி காசிப்பிள்ளை மீதும் மந்திரவாதியான சரஸ்வதி தியாகராஜா மீதும் சங்கானைப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கை ஏற்கனவே விசாரணை செய்த மல்லாகம் முன்னாள் மாஜிஸ்டிரேட் திரு. ரி. எஸ். நேதிசிங்கா வழக்கின்இரு குற்றச்சாட்டுகளிலும் எதிரிகளை விடுதலை செய்து, கவலையீனத்தால், மரணம் விளைவித்ததாக எதிரிகள்மீது குற்றம்சாட்டி சுப்ரீம் நீதிமன்றத்துக்கு வழக்கைப் பாரப்படுத்தியிருந்தார்.

வழக்கைப் பரிசிலனை செய்த அட்டர்னி ஜெனரல் எதிரிகளை விடுதலைசெய்யுமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்தே மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் நேற்று விடுதலை செய்தார். எதிரிகளுக்காக மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

## சிறிமாவின் வடபகுதி விஜயம் ரத்து

கொழும்பு, ஞாயிறு

முன்னாள் பிரதமரும் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதிசிறிமா பண்டாரநாயகா தமது வடபகுதி விஜயத்தை ரத்துச் செய்துள்ளார். அவர் அநேகமாக ஆகஸ்ட் மாதத்தில் வடபகுதிக்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதி விஜயத்தை திருமதி சிறிமா பண்டாரநாயகா ரத்துச்செய்வதற்கு பல்வேறுகாரணங்கள் கூறப்படுகின்றன.

வடபகுதியில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளைகள் அமைப்பதில் ஏற்படும் தாமதம் ஒருகாரணமெனக்கூறப்படுகிறது. இதேசமயம்மாவட்டசபைகள் மசோதாவை எதிர்த்து நாடு முழுவதும் பிரசாரக்கூட்டங்கள் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திட்டமிட்டிருப்பதால் வடபகுதிக்கு விஜயஞ் செய்வதற்கு இது நல்ல அரசியல் சூழ்நிலை அல்ல'' என திருமதி சிறிமா கருதுவதாகவும் கூறப்படுகிறது.

## தலைகொடுத்த கர்ப்பிணி

வவனியா, ஞாயிறு

யாழ்தேவியில் தலைகொடுக்கப்போன கர்ப்பிணி கடுங்காயங்களுக்குள்ளாகி அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த யாழ்தேவி வவனியாவுக்கு அண்மையில் வரும் பொழுது மதகு ஒன்றில் பதுங்கியிருந்த இப்பெண் ரயிலில் தலைகொடுக்கப்போனாராம். இவரது நிலைமை மோசமாக இருப்பதாகக் கூறப்படுகிறது இரு பிள்ளைகளுக்குத்தாயான இவர் தற்பொழுது 6 மாதக் கர்ப்பிணி எனவும் தெரியவருகிறது.

## மின்சாரம் தடை

### சீராக்குவதில் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் மின்சக்தி நிலையத்திலுள்ள மின்சாரத் தடைக்கல் நெருப்புப் பற்றியதால் நேற்று முழுவதும் மின்சார விநியோகம தடைப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையும், காற்றும் மின்னலுமே இதற்குக் காரணமாம்

யாழ்ப்பாணத்தில் உள்ள அவசர தேவைகளுக்காக மட்டும் யாழ்ப்பாணம் மின்சக்தி நிலையம் நேற்று மின்சார விநியோகம் செய்தது. நேற்று நண்பகல் முதல் பழுதடைந்த சுன்னாகம் மின்சக்தி விநியோகத்தை சீராக்குவதில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். [கா. நி.]

## ஜீப் மோதி ஒருவர் நிலை கவலைக்கிடம்

வவனியா, ஞாயிறு

இன்று மாலை ஜீப் ஒன்றினால் ஒருவர் மோதப்பட்ட சம்பவம் வவனியாவுக்கு அண்மையில் உள்ள நேரியகுளம் - மாங்குள வீதியில் நடைபெற்றுள்ளது காயமுற்றவர் நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

[8-ம் பக்கம் பார்க்க]

15,000 ரூபா பெறுமதியான

## வைரக்கற்களை கடத்த முயன்றவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

15 ஆயிரம் ரூபா பெறுமதியானதென மதிக்கப்படும் வைரக் கற்களையும் இரத்தினக் கற்களையும் கடத்திச் செல்ல முயன்றாராம் ஒருவர். இவரை பிரயாணம் செய்ய விடாது தடுத்து நிறுத்தியுள்ளனர் சுங்க இலாகாவினர்.

பலாலி விமானநிலையத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முயற்சிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வைரக் கற்களும் இரத்தினக் கற்களும் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

காங்கேசன்துறை சுங்க இலாகா சப்கலெக்டர் திரு. ரணசிங்கவும், சுங்க உத்தியோகத்தர் திரு. நடராசாவும் விசாரணை நடத்தினர். வடபகுதி சுங்க கலக்டர் திரு. செனிவரத்தின மேல் விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

[அள. நிரு; காங். நிரு']

## விநியோகிப்பதற்கு 2,000 கோழிக்குஞ்சு

சங்கானை, ஞாயிறு

கோழிக்குஞ்சுத் தட்டுப்பாடு நீங்குவதற்கோர் அறிகுறியாக ஏராளமான உயர்ந்த ரக குஞ்சுகளை சங்கானை கிருஷிக இலாகாவினர் வரவழைத்துள்ளனர்.

2 ஆயிரத்திற்கு மேற்பட்ட குஞ்சுகள் அடுத்த மாதம் 2,6,10,14-ம் திகதிகளில் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

[தமிழ் மொழி 'அ' பாடத்திட்டத்திற்கான மாதிரி வினா விடைகளை 6-ம், 7-ம் பக்கங்களில் காணலாம்.]

ஆலயப்பிரவேசத்துக்கு

# பலாத்காரம் மேற்கொண்டால் ஆலயக் கதவுகள் மூடப்படுமாம்

## சைவ அனுட்டானசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஆலயப் பிரவேசப் பிரச்னையில் பலாத்கார முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் சமய அனுட்டான சுதந்திரம் கிடைக்கும்வரை சைவாலயக் கதவுகளை மூட வேண்டும்' என்று அகில இலங்கை சைவானுட்டான பாதுகாப்புச்சபை தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் ஜே. பி. அகில இலங்கைத் தர்மகர்த்தாக்கள் சபையிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிறநாட்டார் இலங்கையில் ஆட்சிக்கு வந்தபோது நமது மதஅனுட்டான சுதந்திரங்கள் மறுக்கப்பட்டன. அது போல இன்று ஆலயப் பிரவேசம் என்ற பிரச்னை தலைதூக்கி சைவர்களின் மத அனுட்டானத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நமது சைவ மதஅனுட்டான சுதந்திரத்திற்கு பலாத்கார நடவடிக்கைகளினால் ஆபத்து ஏற்படுமாயின் சைவாலயக்கதவுகளை மூடுவதனைவிட வேறு மார்க்கமே இல்லை. சைவாலய தர்மகர்த்தாக்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மனேச்சர்:

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மனேச்சர் பதவிக்கான விண்ணப்பம் கோருகின்றது. 7-5-68க்கு முன் விண்ணப்பிக்கவும். க.பொ.த.பத்திரமும் கூட்டுறவுப் பயிற்சியும் கூட்டுறவுப் பண்டகசாலை அனுபவமும் உடையவராய் இருக்க வேண்டும். ரொக்கம் ரூபா 1000/-மும் ரூபா 5000/- ஆதன பிணையும் கொடுக்க வேண்டும். வேதனம் ரூபா 150/- தொடக்கம் 200/- வரை எல்லாம் உட்பட. வருடம் ரூபா 5/-படி ஏற்றம். சா.வீ.பொன்னையா, தலைவர் கரவெட்டி. 1451

### விற்பனைக்கு

காணி:

சுழிபுரத்திலுள்ள சத்தி பக்காடு அல்லது வளக்கம் பரை. 5 1/2 பரப்பு. பிரதானவீதியிலிருந்து 30யார். அதிலிருந்து தனிவழி 12 அடி ஒழுங்கை. விபரங்களுக்கு: க. கிருஷ்ணபிள்ளை, கொப்பிட்டி, உடுவில், சுன்னுகம். 1527

### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

[The Jaffna Education Centre]

ஜி. சி. ஈ. உயர்தரம் (A. L.) கலை / விஞ்ஞானம் சாதாரண தரம் [O. L.] கலை / விஞ்ஞானம்; வர்த்தகம் ஆகிய வகுப்புக்கள் ஆங்கிலம் / தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. விண்ணப்பங்கள் 10-5-68 திகதிக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1453

### சீட்டு

வவுனியா மாவட்டக் கல்வி அபிவிருத்திக்கழகத்திற்காக 25-4-68ல் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டின் முடிவுகள். 1-வதுபரிசு இல: 185. 2-வது 993. 3-வது 1148, 351, 8, 1023, 1287. க. பரமசாமி, செயலாளன். 1454

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 29-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அன் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அன் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் அன் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — என். கந்தையா, 6-45 பா ஊாளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 இசைவிழா அஞ்சல், 10-15 [illegible]

## 'ஏற்றத்தாழ்வு நீங்கும்வரை தமிழருக்குவிமோசனமில்லை'

உடுப்பிட்டி, ஞாயிறு "தமிழர் சமூகத்தில் பெரும் பிரச்னையாக விளங்கும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் வரைக்கும் தமிழருக்கு விமோசனம் கிடையாது. எமது குடும்பத்திலுள்ள சகோதரர்களைப் புறக்கணித்து விட்டுப் பெரும்பான்மையினரான சிங்களவரின் மத்தியில் தமிழரின் உரிமையை எப்படிப் பெற முடியும். இது நீதி நியாயமற்ற செயலாகும். ஆகவே தமிழர்களாகிய நாம் எமக்கிடையே பரஸ்பர நல்லெண்ணத்துடன் விட்டுக் கொடுக்க வேண்டும்."

மேற்கண்டவாறு பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம்பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற வடமராட்சிச் சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவில் பேசுகையில் கூறினர்.

சமாசத் தலைவர் திரு இ. சு. இராமநாதன் விழாவிற்குத் தலைமை வகித்தார். கிராம அபிவிருத்திக் குடிசைக் கைத்தொழில் உதவி அதிபர் திரு எஸ். கந்தவனம் விழாக் கொடியை ஏற்றி வைத்தார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்திரு கே.என்.நவரத்தினம் பேசும் பொழுது வடமராட்சி மக்கள் ஊக்கமும், உற்சாகமும் உள்ளவர்களென்றும் சமூகசேவையிலும், கலையிலும் பிறபகுதிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றார்கள் என்றும் மறைந்து வருகின்ற ஆதிகலைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பதில் முன்நிற்கின்றார்களென்றும் குறிப்பிட்டார்.

வடமராட்சிச் சன சமூக நிலையங்களின் சமாஜக்காரியதரிசி திரு. சி. செல்லையா பேசுகையில், "இன்றைய வாலிபர்கள் தான் நாளைய உலகின் சிருஷ்டிகர்த்தாக்கள் எமது சமூகம் முன்னேறுவதற்கு விளையாட்டுக்கள் அதி முக்கியம் வாய்ந்தவையாகும். சமூகசேவையும் எம் மக்கள் மத்தியில் இருக்கும் சாதிவேறுபாடுகளை ஒழிப்பதற்குத் துணைபுரியும் என்று கூறினர்.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமானதிரு மு. சிவசிதம்பரம் வடமராட்சிச் சனசமூக நிலையங்களின் சேவைகளைப்பாராட்டி இப்படியான சாஜங்கள் மூலமே கிராமங்கள்முன்னேற்றமடையும் என்றார்.

## எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, ஞாயிறு தேநீர்க்கடைப் பிரவேச வழக்கு விசாரணை முடிவில் எதிரிகள் இருவரையும் மல்லாகம் நீதிபதி திரு. எம் சண்முகலிங்கம் விடுதலை செய்து தீர்ப்புவழங்கினர் சாட்சியங்கள் போதியளவு திருப்திகரமாக இல்லையென தீர்ப்பின்போது தெரிவிக்கப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த பொன்னையா முத்துசாமிப்பிள்ளை என்பவரின் தேநீர்க்கடைக்குள் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அத்துமீறிப் பிரவேசித்து குழப்பம் செய்தது சம்பந்தமாக அந்தனி எட்வேட், எஸ். தம்பிமுத்து ஆகிய இரு வாலிபர்கள் சங்கானைப் பொலிசாரால் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

எதிரிகள் சார்பில் புறக்டர் சிவசிறீதரன் ஆஜரானர்.

## 500 ரூபா வழங்குமாறு தீர்ப்பு

குரும்பசிட்டி, ஞாயிறு தீ வைத்து வீட்டுக்குச் சேதம் விளைவித்த நபருக்கு நஷ்டஈடாக வீட்டின்சொந்தக்காரருக்கு ரூபா 500 வழங்குமாறு மல்லாகம் மாஜிஸ்ரேட் தீர்ப்பளித்துள்ளார்.

சண்டிலிப்பாய் வாசியான கே பொன்னுத்துரை என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த கற்றையா பெண் சின்னம்மா என்பவருக்குச் சொந்தமான வீட்டுக்கு நெருப்புவைத்து சேதப்படுத்தியதாக சங்கானைப் பொலிஸாரால் இவ் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

பொலிஸ்தரப்பில் வழக்கறிஞர் எஸ். நடராசா வழக்கை நடாத்தினர்.

## சந்தேக நபர் கைது

குரும்பசிட்டி, ஞாயிறு திருட்டுச்சம்பவம் சம்பந்தமாக சுமார் மூன்றுமாதகாலமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் மருதனுமடம் சந்திக் கருகாமையில்சுன்னுகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

ஊரெழுவாசியான எம். தெய்வேந்திரன் என்பவரே கைதான நபராகும். இவர் ஏழாலை மயிலங்காடு வாசியான எஸ். செல்லன் என்பவரது வீட்டிலிருந்து சுமார் ரூபா1500பெறுமதிவாய்ந்த தங்கநகைகள் இவ்வருடம் ஜனவரிமாதம் 14-ம் திகதி திருட்டுப்போனது சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்துள்ளார்.

மல்லாகம் நீதிபதி எம். சண்முகலிங்கம் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 28-ந்திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## அறிவித்தல்

### கேள்விப்பத்திரம்

சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் 1968-ம் வருடம் மே மாதம் 6-ம் திகதி காலை 10-00 மணி வரை கீழ்க்காணும் கடைகளுக்கான குத்தகை வழங்கும் கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. மீன்சந்தைக் கடை.
2. ஆட்டிறைச்சிக்கடை.

கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் 1968-ம் வருடம் மே மாதம் 5-ம் திகதி நடுப்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். மற்றும் விபரங்களைப் பட்டினசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 24-4-68.

பொ.இ/- 642




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

**றோயல் டிஸ்பென்ஸறி**

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் போரை எதிர்த்து மிகப்பெரிய சர்வதேச மாணவர் இயக்கம்

## பலநாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள்

நியூயோர்க், ஏப்ரல் 28

**வியட்னும் போரை எதிர்த்து, மிகப்பெரிய சர்வதேச மாணவர் இயக்கமொன்று பல நாடுகளிலும் ஒரே நேரத்தில் நேற்று ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் ஆரம்பித்துள்ளது.**

**இன ஒதுக்கல் கொள்கைக்கு ஒரு முடிவு காண்பதும், இந்த இயக்கத்தின் நோக்கங்களிலொன்ருகும்.**

நேற்று, அமெரிக்காவில் நியூயோர்க் உட்படப் பல நகரங்களிலும் வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

இந்த மாணவ ஆர்ப்பாட்டங்களைத்தொடர்ந்து, கனடா, ஆஸ்ரேலியா, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், மெக்ஸிக்கோ, இந்தியா, பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, மற்றும் பல ஆபிரிக்க நாடுகளிலும் மாணவர்கள், போர் எதிர்ப்புக் குரலைக் கிளப்பியுள்ளனர்.

### பிராக்கில்

செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் சுமார் 5,000 மாணவர்கள் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னுல், நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், கீழே அமர்ந்திருந்து சத்தியாக்கிரகம் செய்தனர். பிறநாடுகளில் நடைபெறும் மாணவ வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவே, பிராக் மாணவர்கள் இவ்வாறு செய்தனர். எவ்வித அசம்பவிதமுமின்றி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

### பாரிஸில்

பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸில், நேற்றுச் சிறிது நேரம் வடவியட்னும், வியட்கொங்கியகொடிகள் வானத்தில் படபடத்துப் பறந்துகொண்டிருந்தன.

இக்கொடிகளே, வியட்கொங்கின் அரசியற்கிளையான தேசிய விடுதலை முன்னணியுடனுன உறுதிப்பாட்டைத் தெரிவிக்குமுகமாகப் பிரெஞ்சு மாணவர் சங்கத்தின் தேசிய வியட்னும் கமிட்டியே பறக்கவிட்டிருந்தது.

பிரெஞ்சு மாணவர்கள், பாரிஸில் சில கட்டிடங்கள் மீது கட்டிவிட்ட இந்த வடவியட்னுமிய, வியட்கொங் கொடிகளை பின்னர் அதிகாரிகள் இறக்கிவிட்டனர்.

### டோக்கியோவில்

ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில், வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு வற்புறுத்தி, மாணவர்கள், அமெரிக்கத் தூதரகம் முன்னுல் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர். அப்போது, பொலிசாருக்கும் மாணவர்களுக்குமிடையே இழுபறிச்சம்பவங்கள் ஏற்பட்டன.

பொலிசார் பலரைக்கைது செய்தனர். விரைவிலேயே அவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்திவிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 2,700 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

---

ஜெருசலத்தில்

# இஸ்ரேலின் உத்தேச இராணுவ அணிவகுப்பு

## ஐ நா. பந்தோபஸ்து சபை கைவிடுமாறு கோரிக்கை

### இஸ்ரேல் நிராகரித்தது

டெல் அவிவ், ஏப். 28

அடுத்த மாதம் 2-ம் திகதி, ஜெருசலத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள இஸ்ரேல் சுதந்திரதின இராணுவ அணிவகுப்பைக் கைவிடுமாறு ஐ. நா. பந்தோபஸ்துசபை கேட்டுக்கொண்டுள்ள கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்து விட்டது.

இஸ்ரேலின் இந்த உத்தேச இராணுவ அணிவகுப்பினுல், குறுப்பிட்ட பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளையுமென்ற ஜோர்தானின் புகாரை நேற்றிரவு விவாதித்த ஐ. நா. பந்தோபஸ்து சபை, அணிவகுப்பைக் கைவிடுமாறு இஸ்ரேலைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தை இந்தியா, பாகிஸ்தான், செனகல் ஆகிய மூன்று நாடுகளும் சபையில் சமர்ப்பித்தன. இஸ்ரேலின் அணிவகுப்பு நடவடிக்கை, மேற்கு ஆசிய பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கலாம் என்ற ஐ நா. பொதுக் காரியதரிசியின் கருத்தையும் தீர்மானம் ஆதரித்தது.

சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. ராஜேஸ் மிஷ்ரா, ஏற்கனவே மேற்கு ஆசிய பகுதியில் நிலவும் ஆபத்தான நிலைமையை மேலும் மோசப் படுத்தாதிருக்குமாறு இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டார்.

### இஸ்ரேல் நிராகரிப்பு

ஆனல், இஸ்ரேல் பிரதிநிதி, தமது பதிலுரையில் சபையின் கோரிக்கையைத் தமது நாடு ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், இராணுவ அணிவகுப்பு நடத்தும் விஷயம், தமது நாட்டின் உள்விவகாரமாகும் எனவும் வலியுறுத்தினுர்.

---

# பூர்வாங்க சமாதான பேச்சுக்களுக்கான இடம்

## இன்னும் உடன்பாடு இல்லை

வியன்ஷியென், ஏப். 28

வியட்னுமில் சமாதானம் ஏற்படுத்துமுகமாகப் பூர்வாங்க ஆலோசனைகள் நடத்தும் இடம்பற்றி அமெரிக்க வடவியட்னும் பிரதிநிதிகள் லாவோஸ் தலைநகரான வியன்ஷியெனில் நேற்று மீண்டும் கூடிப்பேசியுள்ளனர்.

ஆனுலும், இப்பேச்சுவார்த்தைகளின்போது, இருதரப்பினரும் சந்திக்கக் கூடிய பொது இடம் பற்றிய உடன்பாடு ஏற்படவில்லை என அமெரிக்க ராஜாங்கஇலாகா வாஷிங்டனில் அறிவித்துள்ளது.

போலாந்துத் தலைநகரான வார்ஸோ அல்லது கம்போடியத் தலைநகரான நாம்பென்னேதான் தனக்கு உகந்த இடமென வடவியட்னும் தொடர்ந்துவலியுறுத்தி வருவதாகவும் ராஜாங்க இலாகா தெரிவித்துள்ளது.

---

ஷாங்காயில்

# சதிக்குற்றம் சுமத்தப்பட்ட எழுவருக்கு மரணதண்டனை

## மக்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது

ஷாங்காய், ஏப்ரல் 28

ஷாங்காய் நகரில், சதிக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட 7 பேர், நேற்றுப் பகிரங்க தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டனர்.

இந்த ஏழு பேரினதும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சியைச் சுமார் 10,000மக்கள்பார்த்துக்கொண்டிருந்ததாக ஷாங்காய் ரேடியோ அறிவித்தது.

மற்றும் மூன்று பேருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னுள் ஷாங்காய் கவர்னர் ஒருவர், மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக இழுத்துக் கொணரப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார். ஆனுல், அவருக்கு விதித்த தண்டனைபற்றித் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

---

# மலேஷிய துணைப் பிரதமர்

## இந்தியா வருகிருர்

புதுடில்லி, ஏப். 28

மலேஷியத் துணைப் பிரதமர் திரு. துன் அப்துல் ரஸாக், மூன்று நாள் விஜயத்தில், செவ்வாய்க்கிழமை இந்தியா வரவிருக்கிருர்.

அவர், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், துணைப் பிரதமர் திரு. மொராஜி தேசாயையும் சந்தித்துப் பேசுவார்.

மலேஷியாவுக்கும் இந்தியாவுக்குமிடையேயான நட்புறவையும், ஒத்துழைப்பையும் மேலும் வளர்ப்பது பற்றியும், தென் கிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்புப் பிரச்னைகள் சம்பந்தமாகவும் திரு. ரஸாக், இந்தியத் தலைவர்களுடன் ஆராய்வார்.

---

# நாசகார ஆயுத உற்பத்தியை கைவிடுமாறு கோரிக்கை

## உலக விஞ்ஞானிகளிடம் பாப்பரசர் போல்

வத்திக்கான், ஏப். 28

பாப்பரசர் போல், அணு ஆயுதங்கள், மற்றும் நாசகார ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டாமென உலகிலுள்ள விஞ்ஞானிகளிடம் உருக்கமான ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மனித இனத்தின் அழிவுக்குப் பயன்படுத்தப்படும் பயங்கர நாசகார ஆயுதங்களையும், மற்றும் சாதனங்களையும் தயாரிக்கும் வேலைகளில் ஈடுபட வேண்டாமென அவர், சகல விஞ்ஞானிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### பாகிஸ்தான் கப்பல்கள்

#### இந்தியா விடுவித்தது

புதுடில்லி, ஏப். 28

கச் பகுதிக்கு அருகே, கடந்த பெப்ரவரி மாதம் பிடிக்கப்பட்ட 30 பாகிஸ்தானியக் கப்பல்களில் 28 கப்பல்களை இந்தியா விடுவித்துள்ளது. விடுவிக்கப்பட்டுள்ள இக் கப்பல்களை திருப்பிப் பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு இந்தியா, பாகிஸ்தானிடம் அறிவித்துள்ளது.

கப்பல்கள் பிடிக்கப்பட்டபோது, கைது செய்யப்பட்ட 333 பேர்கள், விசாரிக்கப் பட்டுத் தமது தண்டனையையும் நிறைவேற்றிய பின்னர், ஏற்கனவே விடுவிக்கப்பட்டு விட்டனர். மற்றும் 85 பேர், விரைவில் விசாரிக்கப்படவிருக்கின்றனர்.

---

# சிறையில் செக். மந்திரி டாக்டரின் சித்திரவதைக்காளானுர்

பிராக், ஏப்ரல்28

செக்கோஸ்லவாக்கிய உள்துறை மந்திரி, தாம் சிறையில் இருந்தபோது, அங்கிருந்த டாக்டரினுல் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதாக அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அந்த டாக்டர், ஏற்கனவே தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

ஸ்ராலின் சார்பான ஆட்சிக்காலத்தில் நடந்த இச்சம்பவம் பற்றி உள்துறை மந்திரி குறிப்பிடுகையில், அந்த டாக்டர், ஆராய்ச்சிப் பொருளாகத் தம்மைப் பயன்படுத்தி தமக்கு ஊசிகளை ஏற்றியதாகத் தெரிவித்துள்ளார்.

போலி மரணப்பத்திரங்களைக் கைச்சாத்திட்டதாயும் இந்த டாக்டர்மீதுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

---

அமெரிக்க

# ஜனுதிபதி அபேட்சகர் தெரிவில் ஹம்ப்ரி

வாஷிங்டன், ஏப். 28

அமெரிக்க உபஜனுதிபதி திரு. ஹியூபேர்ட் ஹம்ப்ரி, அமெரிக்க ஜனுதிபதிக்கான ஜனநாயகக் கட்சியின் அபேட்சகர் தெரிவில் தாமும் போட்டியிடப் போவதாக நேற்று இங்கு அறுதியாக அறிவித்துள்ளார்.

திரு ஹம்ப்ரி, 1960ல் தமது கட்சியின் ஜனுதிபதி அபேட்சகர் தெரிவில் போட்டியிட்டபோது, காலஞ்சென்ற ஜனுதிபதி திரு. எவ். கென்னடியினுல் தோற்கடிக்கப்பட்டார். திரு. ஹம்ப்ரிக்கு இப்போது 36 வயதாகிறது.

திரு. ஹம்ப்ரியைவிட, ஜனநாயகக்கட்சி சார்பில்

(7-ம் பக்கம் பார்க்க)

---

# எதியோப்பிய மன்னர் இந்தியா வந்தார்

புதுடில்லி, ஏப். 28.

எதியோப்பிய மன்னர் ஹெயிலிசலாஸி, இன்று பிற்பகல் புதுடில்லி வந்துசேர்ந்தார்.

அவர், மூன்று நாட்கள் இந்தியாவில் தங்கியிருப்பார். பின்னர், தாய்லாந்து செல்வார். மொத்தம்எட்டு நாடுகளுக்கு அவரது விஜயம் அவரைக் கொண்டு செல்லும்.

எதியோப்பியமன்னர், இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

அச்சமயம், வியட்னும் மேற்கு ஆசியப் பிரச்னைகளுட்படச்சர்வதேசப் பிரச்னைகளையுமிட்டு அவர் பிரதமர் இந்திராவுடன் கலந்தாலோசிப்பார். நடுநிலைமைக் கொள்கையில் அக்கறையுள்ள நாட்டின் தலைவர் என்ற முறையில், எதியோப்பிய மன்னர், பரந்த அளவில் ஒரு சமாதான மாநாடு நடத்த வேண்டுமென்ற யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவின் ஆலோசனை பற்றியும் இந்திராவுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் என்ன செய்தாலும் அதன் பலாபலன் நம்மைச் சேரும். பிறருக்கு நல்லன செய்தால் நமக்கு நல்ல பலன் கிடைக்கும். தீயன செய்யின் நமக்கும் தீய பலனே கிடைக்கும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 17ந் திகதி
(29-4-68)

## அருமையான யோசனை

நாட்டின் மிகப்பெரிய பிரச்னைகளில் ஒன்ருன வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கவும் அதே சமயம் நமது உணவுத் தேவையை நிறைவேற்றவும் சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தி ஒரு நல்ல யோசனை தெரிவித்திருக்கிருர். இந்த யோசனையை செயல்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டவேண்டிய அவசியமோ சட்டங்கள் கொண்டுவரவேண்டிய தேவையோ கிடையாது. இளம் பெண்களும், பெண்களைப் பெற்று விட்டதுமல்லாமல் அவர்களுக்கு அதிகப்படிப்பும் படிப்பித்துவிட்டோமே என்று கலங்கும் பெற்ருேரும் உறுதிகொண்டால் அவரது யோசனை செயல்படும். நாட்டின் முக்கிய பிரச்னைகளுக்கும் சுலபமாகத் தீர்வு கிடைத்துவிடும்.

கல்யாணமாளுல் தான் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் தான் கல்யாணம்' என்று பழமொழியொன்று உண்டு. உத்தியோகம் கிடைத்தால்தான் நல்ல சீதனத்துடன் நல்லபெண்ணையும் கலியாணம் செய்யலாம் என நமது படித்த வாலிபர்கள் பலர் நாற்காலி உத்தியோகத்தை குறிப்பாக அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்து ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிருர்கள். இதே சமயம் பட்டினத்தில் மட்டுமல்ல கிராமத்திலுள்ள சில இளம்பெண்களும் கூட, அவர்கள் பாடசாலையில் சிறிது படித்துவிட்ட காரணத்தினுல் காற்சட்டை அணிந்து கொழும்பிலும் வெளியூரிலும் வேலைபார்க்கும் நமது இளைஞர்களையே வாழ்க்கையில் அடையவேண்டுமெனக் கனவு காண்கிருர்கள். இலவச ரயில் பிரயாணம், விமானப் பிரயாணம், கொழும்பில் உல்லாச வாழ்க்கை ஆகியன நமது இளம் பெண்களின் உள்ளத்தில் ஊன்றிவிடுகின்றன. ஆனுல் கொழும்பிலும் வெளியூரிலும் உத்தியோகம் பார்த்து உல்லாச வாழ்க்கைவாழா விட்டாலும் அமைதியாக திருப்தியான வாழ்க்கை வாழ முடியாமல், கடனுளியாகி அல்லல்படும் இளம் குடும்பங்கள் எத்தனை என்பது நமது இளம்பெண்கள் பலருக்கும் தெரியாது. பெண்கள் மட்டுமல்ல பெண்களைப்பெற்றுவிட்டதால் அவர்களுக்கு நல்ல கல்வியூட்டிவிட்டால் சீதனப் பிரச்னை குறையுமென்ற நோக்கத்துடன் அவர்களுக்கு கல்வியூட்ட, அத் தப் பெண்பிள்ளைகளின் திறமையாகக்கற்று அதிகம் படிக்க. பின்னர் மகளின் படிப்பிற்கேற்ற அறிவும் உத்தியோகமும் உள்ள மாப்பிள்ளை கிடைக்கவேண்டுமென்று ஏங்கும் பெற்ருேர் பலர்.

திரு.வி. என். நவரத்தினம் சில தினங்களுக்கு முன் மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் கூறியது போல் உத்தியோக மாப்பிள்ளைகளை விடுத்து விவசாயத்திலீடுபட்டுள்ள வாலிபர்களை இளம் பெண்கள் மணந்து கொள்ள முன்வந்தால், படித்த வாலிபர் பலரும் குடியேற்றத்திட்டங்களில் குடியேற்ற விவசாயத்திலீடுபட முன்வருவர் இதனுல் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும்; நாட்டின் உணவு உற்பத்தியும் அதிமரித்து நாடு முன்னேறும். பெண்களினதும் பெண்களை பெற்றவர்களினதும் கண்ணீரும் துடைக்கப்படும். உத்தியோகத்திலுள்ள இளைஞர்களைவிட விவசாயத்திலீடுபட்டுள்ள இளைஞர்களே தமக்கென காணி பூமியும் பணமும் சேர்த்து வைக்கும் நிலையிலுள்ளனர். திரு. நவரத்தினத்தின் இந்த நல்ல யோசனையை இளம்பெண்களும் அவர்களின் பெற்ருேரும் செயல்படுத்தினுல் நாட்டில் நமது சமுதாயத்தில் அமைதியான ஒருசமூகப் புரட்சியையே ஏற்படுத்தியவர்களாவார்கள்.

# அடையாள அட்டை மசோதாவை எதிர்ப்பது ஏன்?

## பார்லிமெண்டில் திரு. நவரத்தினம் கூறிய விளக்கம்

**[ஆள்பதிவு (அடையாள அட்டைகள்) மசோதாவை எதிர்த்து ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் இம்மாதம் 23-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் பேசினுர். அவரை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதென கட்சியின் பொதுக்குழு முடிவுசெய்ததற்குக் காரணமாக இருந்த அவரது பேச்சு இங்கே விபரமாகத் தரப்படுகிறது.]**

### திரு. வி. நவரத்தினம்

உப அக்கிராசனர் அவர்களே நான் இந்த மசோதாவை (ஆள் பதிவு மசோதா) எதிர்க்கிறேன். சபையின் இந்தப் பக்கத்திலிருந்து (அரசாங்க தரப்பில்) இவ்வித நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் வேதனையளிப்பதாகும் என்றே சொல்ல வேண்டும். ஆனுல் சில சமயங்களில் இப்படி நடைபெறத்தான் செய்கிறது. ஆழ்ந்த யோசனைக்குப் பின்னரே இந்த மசோதாவை எதிர்க்க தீர்மானித்துள்ளேன். என்னை இங்கு அனுப்பிய தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே இம் முடிவுக்கு வந்துள்ளேன். இது தமிழ் பேசும் மக்களுக்கு மகாமோசமான இடையூறுகளைத் தரும் ஒரு மசோதா.

என்னைத் தெரிவுசெய்தவர்கள் தமிழ்மக்களே ஆயினும் இம் மசோதா சிங்களப் பெயரில்லாத முஸ்லிம்களையும் பாதிப்பதால் தான் 'தமிழ் பேசும் மக்கள்' என்று குறிப்பிடுகிறேன்.

இம்மசோதா சுமார் 20 வருடங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டு தயாராகி வந்திருக்கிறது.

1948-ல் பிரஜாவுரிமை சட்டங்களுடன் தமிழ் மக்களின் துயர் ஆரம்பித்தது.

பிரஜாவுரிமை மசோதா வந்தபோதே இங்கு வசிக்கும் மக்களில் ஒருபெரும்பகுதியினர் மிகக் கஷ்டமாகப் பாதிக்கப்படப் போகிருர்கள் என்று இச் சபையில் உள்ள கௌரவ அங்கத்தவர்கள் பலர் அச்சம் தெரிவித்தனர். மேலெழுந்தவாரியாக அவ்விதம் தோற்றப்படாவிட்டாலும் அது கடைசியில் தமிழ் மக்களையே பாதிக்கப்போகிறதென்று அவர்கள் அரசாங்கத்தை எச்சரித்தனர்.

இதுசம்பந்தமாக, இச்சபையில், இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டம் விவாதிக்கப்பட்டபோது எனது அரசியல் குருவாகிய திரு. செல்வநாயகம் கூறியதை இங்குகூறவிரும்புகிறேன்.

'ஐயா, போர்த்துக்கீசர், ஆங்கிலேயரின் வாரிசுகளுடன் பிரதம மந்திரி ஒப்பனைசெய்கிருர் அரசியல் ரீதியில் அவர்களால் எவ்வித ஆபத்தும் இருக்காது என்பதை நான் தாழ்மையுடன் கூற விரும்புகிறேன். தமிழர், இந்தியர், முஸ்லிம்கள் ஆகிய பெரும் சமூகங்களே அச்சத்தை உண்டு பண்ணுகின்றன. இந்த சமூகங்களைத்தான் பிரதமர் மறைமுகமாகத் தாக்குகிருர். இதற்கடுத்தாற்போல மொழிச்சட்டம் வரும்போதுதான் நாங்கள் நேரடியாகத் தாக்கப்படுவோம்'.

இவ்வாறு என் தலைவர் தீர்க்கதரிசனமாக 1948-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் திகதி கூறினுர்.

எட்டு வருடங்களுக்குப் பின் மொழிமசோதா வந்தது.

1948-ல் விவாதிக்கப்பட்ட மசோதா இந்தியத் தமிழரைப் பாதிக்கும்முகமாககொண்டுவரப்பட்டது.

இடையிலுள்ள இருபது வருடகாலத்தில் இதுபோல பல மசோதாக்கள் நிறைவேறி இப்பொழுது அவற்றின் உச்சக்கட்டம் வந்திருக்கிறது.

'இம் மசோதாவின் மூலம் சர்வ சமூகப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. அக் காரணத்திற்காக நான் இதை எதிர்க்கிறேன்' என்று எங்கள் தலைவர் கூறினுர்.

இன்று விவாதிக்கப்படும் மசோதா சர்வசமூகப் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியதா என்று கேட்க விரும்புகிறேன்.

இரு சிங்கள அரசியல் கட்சிகளையும் ஒரு காலத்தில் எதிர்த்தவர்கள் எல்லோரையும் சாந்தப்படுத்தி எதிர்க்கட்சியும் இம் மசோதாவை ஆதரிக்கும்முறையில் பிரதமர் நடந்துகொண்ட முறையை நான் மிகவும் பாராட்டுகிறேன். எதிர்க்கட்சியினர் ஏகமனதாக இம் மசோதாவை ஆதரிப்பதிலிருந்தே அதன் உண்மையான தத்துவம் விளங்கும்.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, செல்வநாயகம் என்ன செய்கிருர்? [illegible]

### கலை விழா

அடம்பன், ஞாயிறு மன்ஞர்க் காரியாதிகாரி பிரிவுக் கலைவிழா மன்ஞர் முற்றவெளி திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. கலைவிழாவை மன்ஞர்க் காரியாதிகாரி திரு கே. தயாபரன் ஆரம்பித்து வைத்தார். கலைவிழா ஒழுங்குகளையும், பிரசாரத்தையும் மன்ஞர் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு எஸ். கந்தசாமி கவனித்தார்.

## இன்றைய பலன்

சித்திரை மீ 17 வ
[29 -4- 68]
திங்கட்கிழமை

திதி- துதியை இரவு 12-58 மேல் திருதியை.

நட்சத்திரம்- கார்த்திகை இரவு 12-31 மேல் ரோகிணி.

ராகுகாலம்- 7-27—8-57

சுபநேரம்- 11-57—1-27

இன்று பிறந்தவர்களுக்கு — திடீர் திருப்பங்களும் திகைக்கவைக்கும் சம்பவங்கள் இடம் பெறினும் முடிவு திருப்தியளிப்பதாகவே இருக்கும். முதியவர் ஒருவரின் உடல்நிலை கவலையைத் தரலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும் நாவடக்கம் நன்மை தரும்.

மேஷம்- பணம் பறிபோகும், பாதுகாப்பு நன்று,

ரிஷபம்- குடும்பக்கவலை குறுக்குவழித் தலையீடு.

மிதுனம்- தனச்சிறப்பு, தானிய விருத்தி.

கடகம்: ஆசை வைக்காதே, அவதிப்படாதே.

சிம்மம்- திடீர் வரவு, திகைக்கவைக்கும் உறவு.

கன்னி- உள்ளப்படுதாவில் உவகைக் கூத்து.

துலாம்- அன்னிய வசம், அசுகபோசனம்.

விருச்சிகம்- குடும்ப மகிழ்ச்சி, குழந்தைச் செல்வம்.

தனுசு- பணக் கஷ்டம் நஷ்டமடைதல்.

மகரம்- புதிய செய்தி, புண்ணிய விருப்பு.

கும்பம்- பெரியோர் உறவு, செல்வாக்குப் பெருகும்.

மீனம்- தட்டுகள் திறக்கப்படும், சேனுங்கள் கொடுக்கப்படும்.

— சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே நேற்று முன்தினம் இரவு பலத்த காற்றும் மழையும் கலந்தடித்தது. அதற்கு முதல் நாளும் புயலும் மழையும் அடித்தது. சேதங்களைப்பற்றி தகவல் எதுவுமில்லை.

இந்தக் கோடை காலத்திலே இங்கு மழை பெய்தது பலவிதங்களிலும் வரவேற்கத் தக்கதாகும். பூமியில் உஷ்ணம் தணிந்துள்ளது. செடி கொடிகளும் கமத்தொழிலுக்கும் மிக நல்லது. யாழ்ப்பாணம் பாலைவனமாகி விடுமென்று யாரோ ஒரு 'நிபுணர்' இங்கு வந்து நம்மை பயமுறுத்திஞர்கள். அவருக்கு இந்த மழை அர்ப்பணம்!

ஃ ஃ

சென்ற சில நாட்களாக யாழ்ப்பாண பகுதியில் மின்சாரம் அடிக்கடி தடைபட்டு, பல மணிநேரத்துக்கு இருள் சூழ்கின்றது. ''ஈழநாடு'' பத்திரிகை காரியாலய மெஷின்கள் இதனுல் வேலை செய்ய முடியாமல் தடைபட்டு பலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இன்னும் ஆஸ்பத்திரி முதலிய முக்கிய இடங்களுக்கு எவ்வளவு பாதகம் ஏற்படுகிறதோ!

இங்கு மின்சார சப்ளைக்கு ஏன் அடிக்கடி இவ்வித கோளாறு ஏற்படவேண்டும்? அப்படி ஏற்பட்டாலும் உடனுக்குடன் அதை சீர் செய்யக் கூடாதா? இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் இதைப்பற்றி விசேஷ கவனமெடுத்து, இனி இவ்விதம் ஏற்படாமல் கூடுமான எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்களா?

ஃ ஃ

யாழ்ப்பாண மாநகரசபை நடத்தும் பொதுசன வாசகசாலையிலே தமிழ்ப் புத்தகங்கள் மிகக் குறைவாக இருப்பதாயும், இருக்கும் நூல்களில் பல மிகவும் பழையனவென்றும், தமிழ்ப் பகுதியின் தலைநகரென கூறப்படும் இப்பட்டினத்தில் தமிழ்ப் புத்தகங்களே அதிகமாக இருக்க வேண்டுமென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார்.

இப் புத்தகசாலை கட்டிடம் அழகான முறையில் பூர்த்தியாகி வருகிறது. மச்சின் மீதுள்ள படிக்கும் இடம் வசதியாகவும் கடற்காற்று அதிகமாக வீசவுதாகவுமுள்ளது. ஆனுல் தமிழ்ப் புத்தகங்கள் போதிய அளவு இல்லாதது பெரிய குறை. சென்னையிலே கனிமரா புத்தகசாலையில் உள்ள தமிழ் நூல் விவரங்களைப் பார்த்து, இங்கில்லாதவற்றை வாங்கி வைக்க விசேஷ முயற்சி எடுக்க வேண்டுமென்கிருர் ஓர் அன்பர்.

சென்னை அரசாங்கத்தின் உதவியை, இங்குள்ள இந்திய ஹைகமிஷன் மூலம் பெற்று மநகரசபை அதிகாரிகள் தக்க முயற்சி எடுக்கவேண்டுமென்றே இதை இங்கு குறிப்பிடுகிறேன்.

ஃ ஃ

ஆராத இன்னமுதை அம்மான் தன்னை அயனொடு மாலறியாத ஆதியானைத், தாராடும் மலர்க் கொன்றைச் சடையான் தன்னைச் சங்கரனைத் தன்னொப்பாரில்லாதானை, நீரானைக்காற்றானைத் தீயானை நீள் விசும்பாய் ஆழ்கடல்களே முழ்ந்த, பராய்துறையின் முக்கூடலானைப் பயிலாதே பாழே நாள் உழன்றவாறே

—அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெண்கள்துறவு ஆதியிலிருந்து இருந்துவருகிறது"

## வடமராட்சியில் இந்தியசந்நியாசினிகள்

இமையாணன், ஞாயிறு "இந்தியப் பெண்களுக்காகத் தியாகம் செய்த முதல் பெண் ஐரோப்பியப் பெண்ணான சகோதரி நிவேதிதையாகும். அவர்களது சேவை, தியாகம் முதலியவை நம்மையும் ஊக்குவிக்கின்றது அதே மாதிரி நம் பெண்களும் தொண்டு செய்ய முன் வர வேண்டும்." என பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சகோதரி நிவேதிதையின் நூற்றாண்டு விழாவில் கல்கத்தா ஸ்ரீராம கிருஷ்ண சாரதா மிஷனைச் சேர்ந்த சந்நியாசினிகளில் ஒருவரான பிரவிராஜிகாமுக்திபிராணா கூறினார்.

இவ்விழாவிற்கு திரு. கே. எஸ். அருள்நந்தி தலைமை வகித்தார். ஸ்ரீமத் முக்திபிராணா பேசுகையில் "இலங்கை மக்கள் தம்மை அன்போடு தமது உள்ளத்தில் இருத்தி வருவதாகக் கூறினார்.

ஆண்களுக்கு ஆச்சிரமம் இருப்பது போன்று பெண்களுக்கும் ஆச்சிரமம் உருவாக வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் எண்ணினார். அவருடைய எண்ணம் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் 1954-ம் ஆண்டு நிறைவேறியது. சமயத்தில் உள்ளதை வாழ்க்கையிலும் அனுட்டிக்க வேண்டும். நம்வாழ்வு தன்னலமற்ற சிறந்த வாழ்வாக அமைய, சுவாமி விவேகானந்தர், இராம கிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரைப் பின்பற்ற வேண்டும்.,, என்று முக்திபிராணா சுவாமினி மேலும் கூறினார்.

அவரை அடுத்துச் சுவாமி ஆத்மபிராணா பேசும் போது கூறியதாவது:—

"இறைவன் ஒன்று ஆனால் அவ்விறைவனை வழிபடும் மார்க்கங்கள் தான் பல 'நீர்' என்ற சொல்லுக்குத் தண்ணீர் என்றும், ஜலம் என்றும் பலவிதமாகக் கூறுகிறோம். அதே போல் இறைவனை வழிபடும் முறையும் பல விதத்தில் உள்ளன."

பெண்களுக்குத் துறவு இல்லை என்று சிலர் கருதலாம். ஆனால் பெண்கள் துறவு ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. இதற்கு உதாரணமாக "மைத்ரேயி"ன் சரித்திரம் சான்று பகரும் என்றார் அவர்'

காங்கேசன்துறை

# சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள 4 சங்கங்கள் நடவடிக்கை?

அளவெட்டி, ஞாயிறு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சென்ற சிலமாதங்களுக்கு முன்பு தொழிலாளர்களுக்கு புதியவேலை மதிப்பீடு, சகல படிகளும் உட்பட சம்பளம் ஆகியவை அமுலுக்கு கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது மேற்கண்ட விஷயங்கள் அமுலுக்கு வராத காரணத்தால் தொழிற்சாலையிலுள்ள காங்கேசன் சீமெந்து உற்பத்தித் தொழிலாளர் சங்கம், காங்கேசன் சீமெந்து ஐக்கிய தொழிலாளர் சங்கம், உத்தியோகஸ்தர் சங்கம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் ஆகிய நான்கு தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்து உத்தியோகஸ்தர் சங்கத் தலைவர் திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் அடுத்தமாதம் காங்கேசன் சீமெந்து உற்பத்தித் தொழிலாளர்சங்க முன்றலில் பொதுக்கூட்டமொன்றை நடத்த இருப்பதாகத் தெரிகிறது. கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் படும் என அறியப்படுகிறது.

# வங்காலை கிராமசபை தேர்தல் முடிவுகள்

அடம்பன், ஞாயிறு வங்காலை கிராமச்சபைத் தேர்தலில் முன்னாள் கி. ச. தலைவர் திரு. எஸ். ஜோண் மார்க் 3-ம் வட்டாரத்தில் தன்னுடன் போட்டியிட்டவரை 46 அதிகப்படி வாக்குகளால் வெற்றியீட்டினார் 7-ம் வட்டாரத்தில் யூ. டொன் பிலிப்மிராண்டா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

மொத்தம் 10 வட்டாரங்களைக் கொண்ட இக்கிராம சபைத் தேர்தல் விபரம் வருமாறு:

1-ம்வட்டாரம்- எம். பேனுப் றவ்வல்,

2ம்- வட்டாரம் ஏ. இன்றனிஸ்லஸ்லம்பேட்.

3-ம்வட்டாரம் எஸ். ஜோண்மார்க்

4-ம்வட்டாரம் ஏ. அலோசியஸ்வாஸ்,

5-ம்வட்டாரம் ஏ. வாட்டர்குருஸ்

6-ம்வட்டாரம் பி. பவுலின் குருஸ்

7-ம்வட்டாரம் யூ. டொன் பிலிப்மிராண்டா

8-ம் வட்டாரம் எஸ். இம்மனுவல்குருஸ்

9-ம் வட்டாரம்எஸ். யூவானிஸ் வவ்வல்

10-ம்வட்டாரம் எஸ். ஆரோக்கியம் பீரிஸ்.

## 2 கோடி ரூபாவில் பருத்தி ஆலை

இமையாணன் ஞாயிறு சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் உடுப்பிட்டியில் உள்ள வல்லையில் பருத்தி ஆலை ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இப்புதிய பருத்தி ஆலை ஆரம்பிக்கப்பட்டதும் இந்தியாவிலிருந்து [பருத்தி] பஞ்சை வரவழைத்து அதிலிருந்து இங்கேயே நூலையும் நூற்று பின்பு புடவைகளும் இங்கேயே செய்யப்படும். இதனால் வட பகுதியின் உள்ளூர் உற்பத்தி பெருகி பொருளாதார முன்னேற்றமடைவதுடன் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும்இன்று நடைபெறவிருக்கிறது.

'நந்தனுக்கருளியநடேசன்' என்னும் பொருள் பற்றி செல்வி ஆர். சோமசுந்தரம் சங்கீத கதாப்பிரசங்கம் நடத்துவார்.

சங்கானை

## கொலை முயற்சி வழக்கு தள்ளுபடி

குரும்பசிட்டி, ஞாயிறு சாட்சியங்கள் முரண்பாடு காரணமாக சங்கானைக் கொலை முயற்சி வழக்கின் எதிரிகள் இருவர் மல்லாகம் நீதிபதி திரு எம். சண்முகலிங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 4-ந் திகதி சங்கானையைச் சேர்ந்த கே. வயித்திலிங்கம் என்பவரை துப்பாக்கியினால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக சங்கானைப் பொலிசார் இவ் வழக்கில் முருகையா. இரத்தினசிங்கம் என்ற இரு வாலிபர்களின் மேல் குற்றம் சாட்டியிருந்தனர். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் சிவ. ஸ்ரீதரன் ஆஜராகியிருந்தார்.

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். இளைஞர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் திரு ஆர். சி. மன்மதராஜன் தலைமையில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- திரு ஆர். சி. மன்மதராஜன், திரு இ. வீரசிங்கம்.

மன்றத்தலைவர்:- செல்வன் ரி. ஸ்ரீஸ்கந்தராசா

செயலாளர்:- செல்வன் பி. பாலிதராஜா.

தனாதிகாரி:- செல்வன் ஏ. வி. மகாலிங்கம்'

உபதலைவர்கள்: செல்வன் எஸ். லோகநாதன், செல்வன் எம். பாலச்சந்திரன்

உபசெயலாளர்:- செல்வன் பி. யோகேந்திரன்

உபதனாதிகாரி: செல்வன் கே. நடராசா

கணக்குப் பரிசோதகர்:- செல்வன் கே. சற்குணநாதன் எட்டுப்பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## "மகளை மீட்டுத் தருக"

அளவெட்டி, ஞாயிறு "வீட்டை விட்டு ஓடிக் கரையூரில் வாழும் எனது மகளை மீட்டுத் தருக" எனப் பொலிஸாரிடம் இரந்தரனாம் சுன்னாகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்.

நேற்று முன்தினம் இரவு எனது 20வயது மகள் வீட்டிலிருந்து காணாமல் போய் விட்டார். தற்பொழுது எனது வீட்டுக்குப் பக்கத்து வீட்டு இளைஞனுடன் கரையூரில் அவர் வாழ்வதாக அறிகின்றேன். எனது மகளை மீட்டு என்னிடம் தாருங்கள் என சுன்னாகம் பொலிசில் அத்தாய் கேட்டுள்ளார்.

பொலிசார் விசாரணை செய்து வருகிறார்கள்.

## ஒலிம்பிக் படம்

அடம்பன், ஞாயிறு 1962-ம் ஆண்டு ரோமாபுரியில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சிப் படங்கள் மன்னார் பாடசாலைப் பிள்ளைகட்கும் சமகப் பிரதிநிதிகட்கும் இலவசமாக அரசாங்க விளையாட்டுப் பகுதியினரால் இங்குள்ள தியேட்டர்களில் காண்பிக்கப்படவிருக்கிறது. நானாட்டான் பகுதி விளையாட்டு உத்தியோகத்தர் திரு எம். அலோசியஸ் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அடுத்த மாதம் 5-ம் திகதியும், 6-ம் திகதியும் ... வெவ்வேறு தியேட்டர்களில் இப்படம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராதனை நோக்கி...

# இன்று ஆரம்பமாகும் முருகன் பவனி

யாழ்ப்பாணம், திங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முருகன் கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்காக வள்ளி, தெய்வானை சமேதரான முருகப்பெருமான் விக்கிரகம் இன்று காலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்படும்

இன்று காலை 7 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் விசேஷபூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றபின் ஊர்வலம் 8மணிக்கு காங்கேசன்துறை வீதிவழியாகஆரம்பமாகும்.

காலை 8-30 மணிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, 9-30 மணிக்கு மல்லாகம் இந்துக் கல்லூரி, 11-15 மணிக்கு மருதனுமடம் இராமநாதன் கல்லூரி, 12-30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவில், 3 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி 4-15 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி, 4-40மணிக்கு நாவலர்வித்தியாசாலை, 5 மணிக்கு வண்ணை சிவன் கோவில், 6-05 மணிக்கு பொது ஜன நூல் நிலையம். 6-15மணிக்கு யாழ்.மாநகர சபை முன்றல், 6-25 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி, 6-40மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி, 7-20 மணிக்குவீரமாகாளியம்மன் கோவில் வீதிவழியாகவந்து இரவு 7-30 மணிக்கு நல்லை சிவன்கோவிலை வந்தடையும்.

இரவு இங்கு பூசையும், பிரார்த்தனையும், சொற்பொழிவு, நாதஸ்வரம், வில்லுப்பாட்டு ஆகியன அதிகாலைவரை நடைபெறும். நாளை காலை மீண்டும் விக்கிரக ஊர்வலம் கிளிநொச்சி நோக்கி ஆரம்பமாகும்.

## மாட்டு வண்டிப் போட்டி முடிவு

காங்கேசன்துறை, ஞாயிறு பலாலி இராஜ இராஜேஸ்வரி சனசமூக நிலைய இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டு விழா பலாலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றைய தினம் நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்வருமாறு:

'ஏ' பிரிவு:— சபாபதி திருச்செல்வம் [மயிலிட்டி], சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம் [மயிலிட்டி], சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம் [மூளாய்].

''பி', பிரிவு:— தம்பையா கந்தையா [சுன்னாகம்], இளையதம்பி சின்னத்துரை [பலாலி], ஆறுமுகம் மகேஸ்வரன் [மட்டுவில்].

இப் போட்டிக்கு வலிகாமம் வடக்கு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு கே. கந்தசாமி பிரதம மத்தியஸ்தராகக் கடமையாற்றினார், இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார்.

## நுணசை முருகன் உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள் மாதகல் நுணசை முருகமூர்த்திகோவிலின் வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் முதல்திகதி ஆரம்பமாகவிருக்கிறது. தொடர்ந்து நடைபெறும் 10 நாள் விழாக்களிலும் பல சைவ அறிஞர்கள் உரையாற்றுவார்கள்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பண்டித வித்துவான் எம். வி. பாலசுந்தரம், திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம், வித்துவான் மு. சபாரத்தினம், பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம். தருமபுர ஆதீன வித்துவான் சிவஸ்ரீ தத்-ருஷ தேசிகர். சைவப்பிரசாரகர் திரு. த. குமாரசுவாமிப்புலவர், சங்கீதபூஷணம் சி. வினாசித்தம்பி, திருவாளர்கள் எம். வைரமுத்து, சி, கனகநாயகம், பண்டித வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோர் முறையே 10 தினங்களிலும் பிரசங்கங்கள் நிகழ்த்துவர். [வி. நி.]

## அடையாள......

[-4ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. நவரத்தினம்: எனது சகாக்கள் வலைக்குள் சிக்கியதுபற்றி நான் வருத்தப் படுகிறேன்: ஆயினும் எம்மைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு நாம் உண்மையாயிருக்கவேண்டுமாதலால் பல காரணங்களுக்காக நான் இதை எதிர்க்கிறேன்.

(தொடரும்)

## விவசாயிகள் கழக அங்குரார்ப் பணம்

சங்கானை, ஞாயிறு மாரீசன்கூடல் இளவாலையைச்சேர்ந்த இளைஞர்கள் விவசாயத்துறையில் அபிவிருத்தியும், அனுபவமும் காணும்பொருட்டு திரு. இ. செல்லத்துரை தலைமையில் முருகன் இளம் விவசாயிகள் கழகம் எனும்பெயரில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர் ச. வன்னித்தம்பி, உபதலைவர் வே. இராசரத்தினம், காரியதரிசி த. பாலசுப்பிரமணியம், உபகாரியதரிசி சு. ஜெயக்குமார், தனாதிகாரி வை. நாகராசா

## டிஸ்பென்ஸரி உரிமையாளர் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான மருந்துச்சாமான்களை வைத்திருந்த தென்ற சந்தேகத்தின்பேரில் பொலிசாரால்கைது செய்யப்பட்டிருந்த தந்தையையும் மகனையும்யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்திரு.எம். ஜமீல் நேற்று விடுதலை செய்தார்.

சுமார் 20,000 ரூபா பெறுமதியான அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்தை வைத்திருந்ததாக யாழ்ப்பாணம் பொலிசார் ஆஸ்பத்திரிக்கு முன்னுள்ள டிஸ்பென்ஸரி ஒன்றின் உரிமையாளரையும் அவரது மகனையும் கைது செய்து பிணையில் விட்டிருந்தனர்.

இச்சம்பவம் நடந்து ஒன்பது மாதமாகியும் பொலிசார் இவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாததால் சந்தேகநபர்களை மாஜிஸ்திரேட் நேற்று விடுதலைசெய்தார் சந்தேகநபர்களுக்காக வழக்கறிஞர் திரு. அல்பிரட் துரையப்பா ஆஜராகியிருந்தார்.

(கா. தி)

# தமிழ் மொழி

## 'அ' பாடத்திட்டம்

### மாதிரி வினாக்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:

[i] சுதேச வைத்திய முறையை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதைப் பற்றிச் சுகாதார மந்திரிக்கு ஓர் அறிக்கை எழுதுக.

[ii] "சமூக சேவை" என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

[iii] 'சயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்பதை விளக்குங் கதையொன்றெழுதுக.

[iv] அண்மையில் நீர் பார்த்த நாடகத்தைப் பற்றி விமரிசனம் எழுதுக.

[v] தாய்மொழி மூலம் உயர்தரக் கல்வி என்பது பற்றிச் சாதக பாதகமான கருத்துக்களை விவரித்து எழுதுக.

2. பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:

மனிதர்கள் எல்லோரும் சமூக வாழ்க்கையினர். பலர் ஒன்றுகக் கூடி வாழும் பண்பு அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதன் நல் வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்தவே இராச்சியம் தோன்றி வளர்ந்துள்ளது, என்று கிரேக்க அறிஞரான அரிஸ்டோட்டல் கூறியுள்ளார். இவ்வாறு மனிதனுடைய செயல்களை யெல்லாம் சமூக முறையில் ஆராயும் இயல்கள் பலவற்றில் அரசியலும் ஒன்று. அரசியலானது இராச்சியத்தின் தன்மை, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கண்டு கூறும். ஒரு சமூகம் நிலைபெற்றிருப்பது அதன் இராச்சியத்தையும் அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால் அரசியல் தலைசிறந்த அறிவுப் பகுதியாகக் கருதப்படுகிறது. இவ்வியல் ஒரு சமூகத்துள் வாழும் மனிதனுடைய செயல்களின் வரம்பையும் தன்மையையும் அளந்து காட்டும். மனிதன் செயல்களில் பிறராற் கட்டுப்படுத்த முடியாதவை அவன் எண்ணங்களும் கற்பனைகளுமே. ஆதலால் அவற்றை நீக்கி, மனித சமூகத்தின் ஏனைய செயல்களை யெல்லாம் அரசியல் ஆராய்வதோடு அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகளையும் ஒப்பிட்டு ஆராய்கின்றது. இவ்வரசியலைச் சமூகக் கலையென்று கூறுவதுண்டு. மக்கள் கூடிவாழும் சமூகத்தில் அவர்கள் மேற்கொள்ளும் பொதுச்செயல்களைப் பற்றி ஆராயும் கலைகளைச் சமூகவியலென்று பொதுப்பட ஒருதொகைப் பெயரால் இக்காலத்திற் குறிக்கின்றனர். இச்சமூகவியல் பொருளாதாரம், அறநூல், தருக்கநூல், மானிடவியல், சட்டம், வரலாறு முதலிய பல தனியியல்களின் தொகையாகும். இவ்வகை இயல்கள் பௌதிகம், இரசாயனம், கணிதம் முதலிய இயல்களின் தன்மையினின்றும் வேறுபட்டவை. பௌதிகம் முதலிய இயல்கள் உயிரில்லாப் பொருள்களைப் பற்றி ஆராய்கின்றன. அவ்வாராய்ச்சியினை ஆய்வுக்களங்களில் நாம் திட்டமிட்ட கட்டுப்பாடுகளுடன் நடத்தலாம். சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் மனிதனது செயல்களைப் பற்றி ஆராய்பவர்களாதலால் ஓராய்வுக்களத்தில் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தமுடியாது. அன்றியும் எப்பொருளைப் பற்றி அவர்கள் ஆராய்கிருர்களோ அப்பொருள் எக்காலத்திலும் ஒரே தன்மையாக இருக்கமாட்டாது.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

[தமயந்தி சுயம்வர மண்டபத்திற் புகுந்து நளனை அறிந்து மாலை சூட்டல்]

[i] மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்— மின்னிறத்துச்
செய்ய தாள் வெள்ளைச் சிறை யன்னஞ் செங்கமலப்
பொய்கை வாய்ப் போவதே போன்று.

விழித்தாமரை — கண்களாகிய தாமரைப்பூக்கள்

[ii] கன்னிமைத்த லாவடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர் மாலை வாடுதலால் — எண்ணி
நறுந் தாமரை விரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை யாங்கு.

நன்னுதல் — நல்ல நெற்றியையுடைய இலக்குமி.

[iii] விண்ணரச ரெல்லோரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர — மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூடினாள் பொன்.

வன்மாலை — வன்மையுடைய மயக்கம்.
வயம் — வெற்றி.

[i] தமயந்தி சுயம்வர மண்டபத்தே புகுந்தது எதனைப் போலிருந்தது?

[ii] தமயந்தி நளனை எங்ஙனம் அறிந்தாள்?

[iii] பொன், வயவேந்திற்குப் பொன்மாலை சூட்டிய போது ஏற்பட்ட விளைவுகள் எவை?

[iv] பிரித்தெழுதுக:
1. காசினியிற் றோய்தலால்.
2. செங்கமலம்.
3. நளன் றன்னையாங்கு.
4. நறுந்தாமரை.

[v] ஒத்த கருத்துள்ள சொற்கள் ஒவ்வொன்றெழுதுக:
காசினி, சிறை, தாமரை, மனம்.

[vi] இறந்தகால வினைமுற்று, வினையெச்சம், பண்புத் தொகை, பெயரெச்சம், ஏழாம் வேற்றுமை உருபேற்ற பெயர்ச்சொல் என்பவற்றிற்குச் செய்யுள்களிலிருந்து ஒவ்வோர் உதாரணந் தருக.

4. பின்வருவனவற்றின் பொருள் புலப்பட அவற்றை வசனங்களிலமைத் தெழுதுக:

பண்டசாலை, பரிசில், அச்சம் துகில், கட்டளை, வெளிவேடம், சுயம்வரம், அடிமைத் தனம், முதிர்ச்சி, பின்பற்றல்.

5. பின்வருவனவற்றின் குறிப்புப் பொருளை விளக்குக:

வாய் காட்டுதல், தலையெடுத்தல், தொப்பி பிரட்டுதல், கை கொடுத்தல், தலைதடுமாறுதல்.

---

## "கூட்டுறவுக்கருத்து பரப்பப்படவில்லை"

சுழிபுரம், ஞாயிறு

"கூட்டுறவு இயக்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். எமது நாட்டின் தேவை எவை என்பதையும் அவற்றை எப்படி நிறைவேற்றலாம் என்பதையும் நன்கு கவனிக்க வேண்டும். எமது நாடு உணவுப் பொருள்களில் தன் நிறைவு காண வேண்டும் அதற்காக ஒவ்வோர் கூட்டுறவு இயக்கங்களும் தம்மாலானவற்றைச் செய்யவேண்டும். நாம் பொருளாதார நெருக்கடியிலிருந்துவிடுதலையடைய, சிறுதொழில்களை விருத்தி செய்வதுடன், விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமும் அளிக்க வேண்டும்" எனதொல்புரம் மூளாய் ஐக்கிய மேற்பார்வைச் சபையினரால்பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய வடபகுதி கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தலைவர் திரு. எஸ். இராசரத்தினம் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்கள்.

முன்னுள் கூட்டுறவு ஆணையாளர் திரு ஆர். ஸி, எஸ். சகுபேசுகையில்புதியவர்களுக்கு ஊக்கம் கொடுக்காமையும், கூட்டுறவுகருத்துக்களை பரப்பாதது கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் பதக்கம் ஏற்படக் காரணமென்றூர்.

யாழ் மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மூ. குமாரசாமி கூட்டுறவுப் பகுதியைச் சேர்ந்த எஸ். சந்திரசேகரம், இ. ஆறுமுகம் உட்பட மற்றும்பலரும் பேசினர்.

---

## எம். பி. உறுதி

சாம்பல்தீவு, ஞாயிறு

சாம்பல்தீவு கிராம சபையினுல் நடத்தப்பட்டுவரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மூதூர்தொகுதி முதலாவது எம். பி. ஜனுப் முகமதலி விஜயம் செய்து தன்னுல் இயன்ற உதவியை வைத்தியசாலைகளுச் செய்வதாகக் கூறியுள்ளார்.

---

## தனித்தமிழில் பத்திரம்

இமையாணன், ஞாயிறு

தமிழ்ப்பகுதிகளிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குத் தனித்தமிழிலேயே தராதரப்பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளனவாம். வித்தியாபகுதியினரால் அனுப்பப்பட்ட இத்தராதரப் பத்திரத்தில் முழுவதும் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

---

சண்டிலிப்பாய்

## நாகபூஷணி கொடியேற்றம்

சங்கானை, ஞாயிறு

சரித்திரப்பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய், சீரணி நாகபூஷணி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 8-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரா பூரண தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோர்ச்சவமும் நடைபெறும்.

திருவிழா நாட்களில் மடாலயத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

---

## வேலைநிறுத்தத்தில் 150 பேர்கள்

கண்டி, ஞாயிறு

தற்பொழுது கொழும்பில் நடைபெற்று வர்த்தக ஊழியர் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு அளிக்கும் முகமாக இங்கு பல வர்த்தக ஸ்தாபனங்களைச் சேர்ந்த சுமார் 150 ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். கடந்த 27 நாட்களாக இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.


யாழ்ப்பாண அக்கடமியும்
தொழில் நுட்ப கல்வி நிலையமும்
சுண்டிக்குழி- யாழ்ப்பாணம். போன்: 617.

பரீட்சைப் பகுதி கமிஷனரால் அங்கீகரிக்கப்பட்ட ஜி. சி. ஈ. (சாதாரணம்) ஜி. சி. ஈ. (உயர்தரம்) பல்கலைக்கழக புகுமுக வகுப்புப் பரீட்சைகள் மின்சார என்ஜினியரிங் பிருக்டிஸ் (லண்டன் சிட்டி அண்ட் கில்ஸாரால் நடத்தப்படுவது) ஆகிய பரீட்சைகளுக்கு எமது கல்விநிலையம் மூலம் தோற்றலாம். 2-வது தவணை 10-5-68-ல் ஆரம்பமாகிறது. சேர விரும்புபவர்கள் எமது அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்பத்திரங்களை விரைவாகப் பெற்று விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

டைரக்டர்

RAJAH
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Pre Poya & Poya 10-30 a m
It's A Woman's World
(Adult)

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-30 p. m.
LOVES OF HERCULES

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P M.
MarlonBrando, Sophia Loren
in
A countess From Hong Kong

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

## (அ) பாடத்திட்டம்

### விடைகள்

3. [i] தமயந்தி சுயம்வரமண்டபத்தே புகுந்தது, சிவந்த பாதத்தினையும் வெள்ளைச்சிறகினையுமுடைய அன்னம் செந்தாமரை வாவியிடத்துப் போவது போன்றிருந்தது.

[ii] கண்ணிமைத்தலாலும், பாதங்கள் பூமியிற் படுதலினாலும், மலர்மாலை வாடுதலினாலும் தமயந்தி நளனை அறிந்தாள்.

[iii] பொன், வயவேந்திற்குப் பொன்மாலை சூட்டிய போது ஏற்பட்ட விளைவுகள்:—
[அ] தேவர்களெல்லோரும் வெள்கி மனஞ்சலித்தனர்.
[ஆ] பூமியில் உள்ள மக்கள் களிகூர்ந்தனர்.
[இ] பூமியிலுள்ள அரசர் வலிய மயக்கமுற்றனர்.
[iv] 1 காசினியிற் றோய்தலால்—காசினியில் + தோய்தலால்.

2 செங்கமலம் = செம்மை + கமலம்.
3 நளன்றன்னையாங்கு = நளன் + தன்னை + ஆங்கு.
4 நறுந்தாமரை = நறுமை + தாமரை.
[v] ஒத்தகருத்துள்ள சொற்கள்:=
காசினி = பூமி.
சிறை = சிறகு.
தாமரை = கமலம்.
மனம் = உள்ளம்.

[vi] இறந்தகாலவினைமுற்று:—புக்காள்.
வினையெச்சம்:— போய்.
பண்புத்தொகை:— செங்கமலம் [செம்மையாகிய கமலம்].

பெயரெச்சம்:— பூத்த[மண்டபம்].
ஏழாம் வேற்றுமை உருபேற்றபெயர்:— காசினியில்.

4. பொருள்புலப்பட வசனங்களிலமைத்தல்:—
பண்டசாலை:—காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையிற் செல்வமனைகளும் பண்டசாலைகளும் சிறப்புடன் விளங்கித் தோன்றின.

பரிசில்:—தன்னைப் புகழ்ந்து பாடிய புலவர்க்கு அரசன் பெரும் பரிசில் நல்கினான்.

அச்சம்:— பகைவருடைய சேனை படையெடுத்து வருதலைக்கண்ட நாட்டு மக்கள் பேரச்சம் கொண்டனர்.

துகில்:— துச்சாதனன் திரௌபதியின் துகிலை உரிந்து மானபங்கஞ்செய்ய முயன்றபோது கண்ணபிரான் காப்பாற்றியருளினார்.

கட்டளை:— அரசனின் கட்டளையையேற்றுச் சேனைத் தலைவர்கள் போருக்குப் புறப்பட்டனர்.

வெளிவேடம்:— போலியான வெளிவேடங்களினால் கடவுள் அருளைப் பெறமுடியாது.

சுயம்வரம்:—தமயந்தியின் சுயம்வரத்தின்போது பல தேசத்து அரசர்கள் வந்திருந்தபோதும் அவள் நளனுக்கே மாலைசூட்டினாள்.

அடிமைத்தனம்:— பாரதநாட்டின் அடிமைத்தனத்தைப் போக்க, தேசாபிமானிகள் பலர் அல்லும் பகலும் பாடுபட்டனர்.

முதிர்ச்சி:— வயது முதிர்ச்சியடைந்த தசரத மன்னன் தன்மகன் இராமனுக்கு முடிசூட்ட எண்ணினான்.

பின்பற்றல்:—பெரியோரின் வாழ்க்கை முறையைப் பின்பற்றல் சாலச்சிறந்தது.

5. குறிப்புப்பொருளை விளக்குதல்:

வாய்காட்டுதல் — எதிர்த்துப்பேசுதல்.
தலையெடுத்தல் — உயர்ச்சியடைதல்.
தொப்பிபுரட்டுதல்—காலத்துக்குக்காலம் கொள்கை மாறுதல்.
கைகொடுத்தல் — துன்பம் வந்துற்றபோது உதவி செய்தல்.
தலைதடுமாறுதல் — கலக்கமடைதல்.]

(அடுத்த மாதிரி வினாவிடைகள் 13-5-68 இல் வெளிவரும்.)

# தேசிய வாதிகள் எதிர்ப்பு

## முறியடிப்போம் என்கிறார் ஸ்மித்

சாலிஸ்பரி, ஏப். 28

ரொடீஷியாவின் சட்ட விரோத ஆட்சியின் பிரதமரான திரு. அயன் ஸ்மித், தமது நாட்டில் தொடர்ந்து ஆபிரிக்கத் தேசிய வாதிகளின் போர் நடவடிக்கைகள் நிகழுமென அறிவித்துள்ளார்.

ஆபிரிக்கத் தேசிய வாதிகள், ரொடீஷிய-சாம்பியா எல்லைகளில் பலகாலமாக, ரொடீஷிய வெள்ளை ஆட்சியாளரை எதிர்த்துப் போராடி வருவது தெரிந்ததே.

ஆபிரிக்கத் தேசிய வாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இப்போது ஒரு சில இடங்களில் மட்டுமே மிஞ்சியிருப்பதாகவும், அவையும் வெகு விரைவிலேயே முற்றாக நிறுத்தப்படும் என்றும் திரு. அயன் ஸ்மித் உறுதி கூறியுள்ளார்.

# "துவக்கை நீட்டிகுறிபார்த்து நின்றதைக் கண்டேன்"

## சங்கானை கொலை வழக்கு விசாரணை

குரும்பசிட்டி, ஞாயிறு

'காலஞ்சென்றவர் எனது சகோதரர். சம்பவதினம் காலை 11-30 மணியளவில் அவர் ஐயாத்துரை என்பவரின் பனங்கூடலுக்குச் சென்றிருந்தார். அவர் சென்ற சிலமணிநேரத்தின்பின் அந்த பக்கமாகத் துவக்குவெடிச் சத்தங்கள் கேட்டன. சத்தம் கேட்ட திசைநோக்கி ஓடிப் போன சமயம் ஆறுமுகம் எனது சகோதரரை நோக்கித் துவக்கை நீட்டிக் குறி பார்த்தவண்ணம் நின்றார். செல்வரத்தினம், சுப்பையா ஆகியோரும் கைகளில் வைத்திருந்த துப்பாக்கிகளை எனது சகோதரரை நோக்கி குறிவைத்திருந்ததைக் கண்டேன். ஆறுமுகம்தான் இறந்தவரைச் சுட்டார் என நிச்சயமாகக் கூறுகின்றேன்.'

மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் சங்கானை குமரேசன் கொலைவழக்கு விசாரணை செய்யப்பட்டசமயம் நடேசு பெண் நாகராணி என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

'மற்றைய எதிரிகள் இருவரும்கூட துவக்குகள் தாங்கியிருந்தனர். இவர்கள் செல்வரத்தினம், சுப்பையா ஆகியோருக்குப் பின்னால் நின்றனர். இறந்தவரைக் குழந்தையன் தூக்கி விடு கொண்டுசெல்ல முயன்றபோது பிறகும் துவக்கு வெடிச்சத்தம் கேட்டது.

[8-ம் பக்கம் பார்க்க]




இலங்கையில் உணவு விளைச்சலை பெருக்க

பேயர்

விவசாய இரசாயனங்கள் பாவிக்கவும்.

டிப்டறெக்ஸ் 5% தூள்

நெற்பயிர் கதிர் அடைந்ததும், பாதித்து விளைச்சலைக் குறைப்பது நெல் ஈ. இதை ஒழிக்க 5 ருத்தல் டிப்டறெக்ஸ் 5% தூள் பாவிக்கவும்.

டிப்டறெக்ஸ் 50% ஈ. சி.
டிப்டறெக்ஸ் 80% எஸ். பி.

நெற்பயிரைப் பாதிக்கும் அறக்கொட்டியான், தத்துவெட்டி, கம்பளப் புழு, கொப்புள ஈ, ஐங்கோணமூட்டுப் பூச்சி தண்டு ஈ ஆகிய பூச்சிகளை அழிக்க 1 அவுன்ஸ் 5 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

பொலித்தியோன் 50% ஈ. சி.

நெற்பயிரை பாதிக்கும் சந்து குத்தி அலைது, தண்டுகுத்தி, குமிழ் ஈ, ஏனைய வேறு நெற் பூச்சிகளை அழிக்க 1 அவுன்ஸ் 4-6 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

HAYLEYS ஹேலீஸ் லிமிட்டட் BAYER
400, டீன்ஸ் ரேட், கொழும்பு-10.
தொலை பேசி: 96333.

# 4 லட்சம் செலவில் கட்டிடம்

இமையாணன், ஞாயிறு

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மிக விரைவில் சுமார் நாலு லட்சம் ரூபா செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட விருப்பதாகத் தெரியவருகிறது. இக்கட்டிடம் பிரசவ விடுதிக்காகவும் மருந்துச்சாலைக்காகவும் ஒதுக்கப்படுமாம்.

# ஜனாதிபதி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

செனேட்டர்கள் ரொபேட் எவ் கென்னடியும், இஜீயூன் மக்கார்த்தியும் போட்டியிடுகின்றனர்.

மற்றக் கட்சியான குடியரசுக்கட்சி சார்பில் இதுவரை ஒருவரே முன்வந்துள்ளார். அவர், முன்னாள் அமெரிக்க உபஜனாதிபதியான திரு. ரிச்சார்ட் நிக்ஸனாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைத் துறைமுகத்தை தனியாரிடம் ஒப்படைக்க...

## தமிழரசு வாலிப முன்னணி பொதுச் சபை கோரும்?

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 11-ந் திகதி திருக்கோணமலையில் நடைபெறவிருக்கிறது. திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராஜாவின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை தலைமை வகிப்பார்.

அன்றுகாலை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் திருமலைக் கிளையின் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட திருமலைத் துறைமுகத்தை மீண்டும் தனியாரிடம் கொடுக்குமாறு எம். பி. ஒருவர்மூலம் தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரும்பிரேரணையை நிறைவேற்ற முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக வாலிப முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இத்திர்மானம்பற்றி தீவிரமாக ஆலோசனை செய்யு வாலிபமுன்னணிப் பொதுச் சபை, அடையாளஅட்டை மசோதா, வாலிப முன்னணி ஆண்டுவிழா, மாவட்டசபை மசோதா உட்படஇன்றைய அரசியல்நிலைபற்றியும் ஆராயும் எனத் தெரிகின்றது.

(கா. நி.)

---

## மன்னார் பிரதேச கலைவிழா ஏற்பாடு

மன்னார், ஞாயிறு

மன்னாரப் பிரதேசக் கலைவிழா இம்முறை மாந்தைக் கிராமசபைதிறந்த வெளி அரங்கில் நடைபெறவிருப்பதால் அரங்கைச் சுற்றியுள்ள சுமார் ஐந்து ஏக்கர் காட்டு நிலம் துப்புரவாக்கப்பட்டுள்ளது. கலைவாணி கமத்தின் உரிமையாளரான திரு. கே. வி. தம்பித்துரை தமது சொந்தச் செலவில் இந் நிலத்தைத் துப்புரவு செய்து கொடுத்துள்ளார். பாவிக்க முடியாமற் கிடந்த இப் பகுதி கிணற்றையும் அவர் துப்புரவு செய்து உதவியுள்ளார்.

---

## சாம்பியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 19வது வருடாந்த விழாவையொட்டி நடைபெற்ற வடமாகாண சுரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டி நல்லூர் 'யங்லவ் வேனில்' கோஷ்டிக்கும் சுண்டிக்குளி ஸ்ரீமுருகன் கோஷ்டிக்கும் இடையே மேற்படி நிலைய மைதானத்தில் நடைமெற்றது. மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அடுத்து இரு ஆட்டங்களில் வெற்றிபெற்ற 'யங் லவ் வோஸ்' கோஷ்டி சம்பியனாகியது.

[வி. நி.

---

## நாடகபோட்டியும் விழாவும்

சழிபுரம், ஞாயிறு

வடஇலங்கை கிராமியக் கலைக்கழகத்தினர் நடத்தவிருக்கும் நாடகப் போட்டியில் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகமன்றங்கள் கலந்து கொள்ளவிருப்பதால் பூர்வாங்கத் தெரிவு மூலம் நாடகங்களைத் தெரிவு செய்து பின்னர் போட்டியை நடாத்துவதென கழகத்தினர் முடிவுசெய்துள்ளனர். வரும் அடுத்த மாதம் பூர்வாங்க தெரிவும் ஜூலை மாதம் நாடகவிழாவும் நடைபெறும்.

---

## சந்தேகத்தின்மீது ஒருவர் கைது

அளவெட்டி, ஞாயிறு

களவாடப்பட்ட நீர் இறைக்கும் ஒரு 'பைப்' புகையிலைத் தோட்டத்தில் தேடுவாரற்றுக் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஏழாலையையடுத்த மயிலங்காட்டைச் சேர்ந்த வைரமுத்துவுக்குச் சொந்தமான பைப் களவாடப்பட்டது சம்பந்தமாக விசாரணையில் ஈடுபட்டசுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் திரு. டி. செல்லையா ஒரு புகையிலைத் தோட்டத்தில் இந்த பைப் தேடுவாரற்றுக் கிடக்கக் கண்டுபிடித்தார்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் சின்னத்துரை என்பவரைக் கைது செய்த பொலிஸார் மற்றொரு சந்தேகநபரான இளையவி நடராசாவைத் தேடி வருகிறார்கள்.

---

## அங்காடிகளுக்கு மீண்டும் இடம்

கண்டி, ஞாயிறு

கண்டியிலுள்ள நடைபாதைகளிலிருந்து கடந்த 16ந் திகதி அகற்றப்பட்ட அங்காடிகளுக்கு மீண்டும் அவர்கள் இருந்த இடங்களிலேயே வியாபாரம் செய்வதற்கு மாநகரசபையும், மேயரும் அனுமதியளிக்க வேண்டுமெனக் கோரும் ஒரு தீர்மானத்தை எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இம்மாதம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். 23 அங்கத்தவர்களைக் கொண்ட கண்டி மாநகரசபையில் 10 எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உள்ளனர்.

---

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

ராஜ்கோபால் ஜவுளி மாளிகையைச்சேர்ந்த எஸ் சிவப்பிரகாசம் பஜார் வீதியில் ஒரு திறப்பைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

---

# 'திறமைசாலிகளுக்கு ஜனநாயகத்தில் மதிப்பில்லை'

## உபசபாநாயகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

1956-ம் ஆண்டிற்குப்பின் சேர்ந்த ஊழியர்கள் பதவியில் நீடித்திருக்க, சிங்களத் தேர்ச்சி அவசியமா என்பதுபற்றி இன்னும் ஒரு முடிவும் செய்யப்படவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் ஊழியர்கள் தங்கள் எதிர்காலம் பற்றி நிச்சயிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடந்த பாராட்டு கூட்டத்தில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம் பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

### பிரச்னைகளில் தோல்வி

திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

இதுவரை காலமும் நமது பிரச்னைகள் பல விதங்களில் தோல்விதான் கண்டுள்ளது அரசாங்கம்,எதிலும், திட்டவட்டமாக தனது கருத்தை வெளியிடாததுதான் இதற்குக் காரணம்.

### திறைசேரி சுற்றறிக்கை

திறைசேரியின் 701-ம் சுற்றறிக்கையில் சில குறிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் சிங்கள தேர்ச்சிபெற தேவையில்லை யென கூறப்பட்டுள்ளது. இதை தயாரித்த குழுவில் எமது கட்சியை சேர்ந்தவர்கள் இருக்கவில்லை. கடைசியில் நடந்ததென்ன? சுற்று நிருபத்தில் கூறப்பட்டது போல இன்று எதுவும் நடைபெறவில்லை.

### சிங்கள அதிகாரிகள்

சுற்று நிருபத்தை அமுல் நடத்துபவர்கள் சிங்கள அதிகாரிகளாக இருப்பது தான் இதற்கு காரணம் சுற்று நிருபம் திட்டவட்டமாக இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இதனை தயாரிக்கும் போது இக்குழுவில் உள்ளவர்கள், இதைப்பற்றி சிந்தித்திருக்க வேண்டும்.

### சிங்கள தேர்ச்சி

சிறு சேவையாளர்களுக்கு சிங்கள தேர்ச்சி தேவையில்லையென்று சுற்று நிருபம் கூறிய போதிலும் நடைமுறையில் என்ன நடக்கிறது. சிங்கள தேர்ச்சி தேவை என்கிறார்கள். நிரந்தர காரியதரிசியை சந்தித்து விளக்கி கூறியபின் சிங்கள தேர்ச்சி நீக்கப்பட்டது.

சுகாதார சேவையிலுள்ள சிறு சேவையாளருக்கும் சிங்கள தேர்ச்சி தேவையெனக் கூறப்பட்டது பின்பு நாங்கள் தலையிட்டு அதனை நீக்கினோம்.

உணவு பகுதியில், ஸ்ரோருக்கு வெளியில் வாச்சர் வேலை செய்பவருக்கு சிங்கள தேர்ச்சி வேண்டுமாம் வாச்சர் தொழிலில் சேருவதற்கு சிங்கள தேர்ச்சி கேட்கப்படவில்லை. தொழிலில் நீடித்திருப்பதற்கு சிங்களத்தில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெறவேண்டுமாம்.

சுகாதார சேவை, சிறு சேவையாளருக்கு, சிங்கள தேர்ச்சி தேவையில்லையென்று கூறப்பட்டதை தொடர்ந்து பல அரசாங்க ஊழியர்கள் தங்களுக்கும். விதிவிலக்கு அளிக்கவேண்டுமெனக் கோரினார்கள். திறைச்சேரி அதிகாரி திரு சமரக்கொடிக்கு பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டது.

### நிர்ணயிக்கும் உரிமை

அவர் உடனே எல்லா அரசாங்க அலுவலகங்களுக்கும், சிங்கள தேர்ச்சி யாருக்கு தேவையென்று நிர்ணயிக்கும் உரிமை திறைச்சேரிக்குத்தான் உண்டு என்று சுற்று நிருபம் அனுப்பினார் இந்த உரிமையை அவர் பொறுப்பில் விட்டால், தமிழினத்திற்கு நன்மை கிடைக்குமா?

### புதிய சுற்றறிக்கை

மொழியைப் பற்றி திறைசேரியிலிருந்து விரைவில் புதிய சுற்றறிக்கையொன்று வரவிருக்கிறது. சுற்றறிக்கையை வெளியிடமுன் தனக்கு காட்டவேண்டும் என நிதி மந்திரியை யாழ்ப்பாண எம். பி. கேட்டிருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும், தென் பகுதிக்கு செல்லாத அரசாங்க ஊழியருக்கும், சிறு சேவையாளருக்கும், சிங்கள தேர்ச்சி தேவையில்லையென யாழ்ப்பாண எம் பி. வற்புறுத்துவார் புதிய சுற்று நிருபத்தில், இவை இடம் பெறுமென எதிர்பார்க்கிறேன்.

தற்பொழுது அரசியல்வாதிகள் எவ்வளவு செல்வாக்குப் பெற்றவர்களாயிருந்தாலும் சரி அரசாங்கத்தில் எதுவுமே செய்யமுடியாமலிருக்கிறது. ஆதலால் தொழிலாளர் தங்கள் சக்தியைப் பெருக்கிக்கொண்டால், எந்த அரசாங்கம் வந்தாலும் உரிமைகளைப் பெற முடியும்.

ஆசிரியர் பிரச்னை சம்பந்தமாக ஒரு முறை கல்வி மந்திரியை சந்தித்தோம். சம்பள உயர்வுக் கோரிக்கைகளை நியாயமென ஏற்றுக்கொண்டார் ஆனால் இதுவரை அவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை.

இன்றுள்ள ஜனநாயகத்தில் எண்ணிக்கையைத்தான் கணிக்கிறார்கள், திறமைசாலிகளாக இருந்தென்ன, விஷயத்தை விளக்கிக் கூறுபவர்களாக இருந்தென்ன எவ்வித பயனுமில்லை. கட்சியின் எண்ணிக்கையைத்தான் கணிக்கிறார்கள். 14 பேர் வெளியேறப்போகிறோம் என்றால் பயப்படுகிறார்கள். 3 பேர் வெளியேறுகிறோம் என்றால் சரி என்று கூற எத்தனிக்கிறார்கள்.

---

## துவக்கைநீட்டி..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நேரம் என்னுடன்கூட நின்ற சகோதரி வீட்டுக்கு ஓடிவிட்டார். நான் பனை மரத்தின் பின்னால் ஒழிந்து கொண்டேன் துரையன், நல்லையா ஆகியோர் காலஞ் சென்றவரை வந்து தாக்க துரையனின் முதுகில் துவக்குச்சூடு விழுந்தது யார்சுட்டது என்பது தெரியாது. இறந்தவரை நல்லையா, வீட்டிற்குத்தூக்கி சென்றார். பொலிசார் வந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர்' என சாட்சி மேலும் சொன்னார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையைபடுத்து எதிரிகளைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி மேல் விசாரணையை அடுத்தமாதம் 3ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் வக்கீல் கறிஞர் ஆர்.ஜே.செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

சங்கானைப் பொலிசார் வன்னியன் குமரேசன் என்பவரை இவ்வருடம் ஜனவரி மாதம் 31ந் திகதி கொலை செய்ததாக செல்வரத்தினம், ஆறுமுகம், சுப்பையா நடேசு, சுப்பிரமணியம ஆகிய ஐவருக்கு எதிராக இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

### எதிரிக்கு பகிரங்க வாரண்ட்

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 8-ம் திகதி வன்னியன் குமரேசன் என்பவரது பிரேத ஊர்வலத்தின்போது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் சம்பந்தமான வழக்கு விசாரணையையும் அடுத்த மாதம் 5-ம் திகதிக்குநீதிபதி ஒத்திவைத்தார்.

மொத்தம் 16 பேருக்கு எதிராக இவ்வழக்கைத்தாக்கல்செய்தபொலிசார், அன்றையதினம் எதிரிகளிலொருவரான சாந்தி என்பவர் கோர்ட்டிற்கு வரத்தவறியதால் நீதிபதி அவருக்கு பகிரங்க வாரண்ட்பிறப்பித்தார்.

---

வவனியா மாவட்ட

## கல்வி அபிவிருத்தி கழகம்

வவனியா, ஞாயிறு

வவனியா மாவட்டத்தில் உயர்கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் பலர் ஒன்றுகூடி மாவட்டத்தின் கல்விஅபிவிருத்திக்கு உழைக்கும் நோக்குடன் வவனியா மாவட்டக்கல்வி அபிவிருத்திக்கழகமொன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். பிரதம அமைப்பாளர் கலாநிதி பூலோகசுந்தரம், தலைவர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர், உபதலைவர் திரு. இ. தயாபரன், செயலாளர் திரு க. பரமசாமி, உப செயலாளர் திரு. அ.செல்வரத்தினம், தனதிகாரி திரு. க. திருச்செல்வராசா.

---

## கந்தபுராண பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், திங்.

கொக்குவில் மஞ்சவனப் பதி கந்தசுவாமி கோவிலில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் நடாத்திவந்த கந்த புராண விரிவுரைகளி சென்ற வெள்ளிக்கிழமை வள்ளிதிருமணத்துடன் பூர்த்தியடைந்தன.

---

வட பகுதி

# வாடி வீடுகளும் ஹோட்டல் களும் திடீர் சோதனைக்குள்ளாகும்

யாழ்ப்பாணம், திங்

வடபகுதியிலுள்ள வாடி வீடுகளையும், ஹோட்டல்களையும் பொலிஸார் இனி திடீர் சோதனையிடுவார்கள். இதற்கான உத்தரவு ஒன்றைப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பிறப்பித்துள்ளார்.

தலைமன்னார் முதல் பருத்தித்துறை,காங்கேசன்துறை வரையுள்ள சகல ஹோட்டல்களும், வாடிவீடுகளும் சில குறிப்பிட்ட வீடுகளும் இந்த திடீர் சோதனைக்குள்ளாகும். காங்கேசன்துறை வாடிவீட்டில் அண்மையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் வாலிபர்களும், யுவதிகளும் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே பொலிஸ் சுப்பிரிண்டன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

பொய்யான தகவல் கொடுத்து அறைகளை வாடகைக்குப் பெறுவர்கள் மீதும், சந்தேகத்துக்கிடமானவர்களை வாடகைக்கு அமர்த்துபவர்கள் மீதும் பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வார்கள்.

(கா. நி.)

---

## ஜீப்மோதி...

[1ம்- பக்கத் தொடர்ச்சி]

வவனியா பொலிஸ் சார்ஜன்ட் திரு. மிஸ்கின் ஸ்தல விசாரணை நடாத்தினார். செட்டிகுளத்தைச் சேர்ந்த மாணிக்கம் [வயது 35] என்பவரே மோதப்பட்டவராவர்.

சம்பந்தப்பட்ட இராணுவ ஜீப்பையும், சாரதியையும் பொலிசார் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

---

இலங்கையில் [illegible] "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org